(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 38.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2024 யூலை 23, செவ்வாய்க்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1704/2024

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களில் தற்போது சேவையாற்றிவருகின்ற அமய ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவர்கள் தற்போது ஆற்றி வருகின்ற கடமைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(v) அவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1729/2024

கௌரவ ஜகத் பிரியங்கர,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் இன்றளவில் காணப்படுகின்ற பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் மேற்படி பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் காரணமாக உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளுக்குப் பதிலாக பாதுகாப்பான புகையிரத கடவைகளைப் பொருத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1739/2024

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை, கிண்ணியா ஆதார வைத்தியசாலைக்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை யாது;

(ii) தற்போது மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றும் பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி வைத்தியசாலையில் சேவையாற்றும் வைத்தியர்கள் மற்றும் தாதிமார்களின் எண்ணிக்கை அவர்களின் தொடர்பாடல் மொழிக்கு அமைய வெவ்வோறக யாது;

(iv) மேற்படி வைத்தியசாலையில் தற்போது காணப்படுகின்ற ஊழியர் வெற்றிடங்களை நிரப்ப மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1751/2024

கௌரவ இஷாக் ரஹுமான்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'கொவிசெத' லொத்தர் சீட்டு ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி லொத்தர் சீட்டு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் யாது என்பதையும்;

(iii) ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இதுவரை மேற்படி லொத்தர் சீட்டு விற்பனை மூலம் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் அளிக்கப்பட்ட பரிசுத் தொகை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி லொத்தர் சீட்டு விற்பனை மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தை கமத்தொழிலாளர்களின் நலன்புரிக்காக செலவிடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1878/2024

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்தில், 2015ஆம் ஆண்டிலிருந்து இதுவரை க.பொ.த. (உயர் தரப்) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த மாணவர்களின் எண்ணிக்கை விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம் மற்றும் கலை ஆகிய பாடத்துறைகளுக்கு அமைய சதவீத அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மாத்தளை மாவட்டத்திலுள்ள மாணவர்களில் பெரும்பாலானவர்களை க.பொ.த (உயர் தர) விஞ்ஞானம் அல்லது கணித பாடத்துறைகளுக்கு ஆற்றுப்படுத்த எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1910/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் உடைமையிலுள்ள காணிகளின் அளவு மற்றும் அக்காணிகள் அமைந்துள்ள இடங்கள்;

(ii) மேற்படி காணிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள காணிகளின் அளவு, குறைபயன்பாடுடைய காணிகளின் அளவு மற்றும் அக்காணிகள் அமைந்துள்ள இடங்கள்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளில், காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரித்தாகக் காணப்படும் காணிகளின் அளவு மற்றும் அக்காணிகள் அமைந்துள்ள இடங்கள்;

என்பன வெவ்வேறாக யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட குறைபயன்பாடுடைய காணிகளை பராதீனப்படுத்தல் அல்லது குத்தகைக்கு விடுதல் தொடர்பில் தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் கொள்கை யாது;

(ii) மேற்படி காணிகளில் இன்றளவில் பராதீனப்படுத்தப்பட்டுள்ள அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ள காணிகளின் அளவு மற்றும் அக்காணிகள் அமைந்துள்ள இடங்கள் வெவ்வேறாக யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1914/2024

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி தொலவத்த,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதிர்வரும் 05 வருடங்களுக்கான இலங்கையின் மின்சாரத் தேவை தொடர்பில் எதிர்வுகூறல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், எதிர்வரும் 05 வருடங்களுக்கான இலங்கையின் மின்சாரத் தேவை குறித்த தகவல்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி மின்சாரத் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக எதிர்வரும் 05 வருட காலப்பகுதியில் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1918/2024

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வெளிநாடு சென்றுள்ள இலங்கைப் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில், வீட்டுப் பணிக்காகவும் வேறு தொழில் வாய்ப்புகளுக்காகவும் சென்றுள்ளவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி எண்ணிக்கையானது, பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழிலாளர்கள் எனும் வகையில் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) இப் பெண் தொழிலாளர்களின் நலனோம்புகை தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1943/2024

கௌரவ மிலான் ஜயதிலக்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் மின்சக்தி நெருக்கடி தொடர்ந்தும் காணப்படுகின்றதா என்பதையும்;

(ii) மின்சக்தி நெருக்கடி காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட தாக்கம் யாதென்பதையும்;

(iii) மேற்படி மின்சக்தி நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

2004/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மருத்துவ வழங்கல் பிரிவினால் மருந்து வழங்குநர்களுக்கு இன்றளவில் செலுத்தப்படவேண்டியுள்ள பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மோசடிகள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ள வழங்குநர் நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வழங்குநர் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு வழங்குநர் நிறுவனத்திற்கும் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் பணம் செலுத்துதல் தாமதமாகியுள்ள மேற்படி (அ)(ii)இல் குறிப்பிடப்பட்ட வழங்குநர் நிறுவனங்கள் அல்லாத மருந்து வழங்குநர் நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வழங்குநர் நிறுவனத்திற்கும் செலுத்தப்பட வேண்டியுள்ள பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) பணம் செலுத்துதல் தாமதமடைகின்ற காரணத்தினால் மேற்படி வழங்குநர் நிறுவனங்களுக்கு வட்டி செலுத்தப்படுகிறதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் (திருத்தம்),— 2018 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— முற்பாதுகாப்பு வழிமுறைகள் (திருத்தம்),— 2018 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

3.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— தண்டனைச் சட்டக்கோவை (திருத்தம்),— (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

4.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— மத்தியஸ்த சபைகள் (திருத்தம்),— 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 நவம்பர் 27 ஆம் திகதிய 2360/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 பெப்ரவரி 13 ஆம் திகதிய 2371/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பகிரங்க நிதிசார் முகாமைத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பால்நிலைசார் சமத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

வெளிநாட்டுத் தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்றங்கீகரித்தல், பதிவுசெய்தல், மற்றும் வலுவுறுத்துதல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

குடிவரவுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மே 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 24 ஆம் திகதிய 2368/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம்,— 2022 மார்ச் மாதத்தில், அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் தொடர்ச்சியான வீழ்ச்சியை கண்டிருந்தமையால், இலங்கை கடுமையான நிலையான படுகடன் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தமையாலும் இதன் விளைவாக, இலங்கை நாணயச் சபையின் ஆலோசனையின் பேரில், பொருளாதார நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்காக இலங்கை வெளிநாட்டு பொதுப்படுகடன் மீள் கொடுப்பனவுகளை இடைநிறுத்தியிருந்தமையினாலும்;

இந்த கடுமையான பிரச்சினை பற்றி பொதுமக்களுக்கு வெளிப்படையாக வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF ) கடனை மறுசீரமைப்பதற்கும், நெருக்கடிக்கு தீர்வைவொன்றைக் காண்பதற்கும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தமையினால் அக்கறை தாரர்களின் ஆலோசனையின் பேரில், இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நிதி ஆலோசகர் லஸார்ட் (Lazard) மற்றும் சட்ட ஆலோசகர் க்ளிஃபர்ட் சான்ஸ் எல்எல்பீ (Clifford Chance LLP) ஆகியோர்களை நியமித்திருந்தமையினாலும்;

சர்வதேச நாணய நிதியமானது (IMF), இலங்கையின் நிதியியல் நிலைமை பற்றிய விரிவான மீளாய்வொன்றை மேற்கொண்டிருந்ததுடன், சவால்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை வரையறுத்து நிலையான படுகடன் பற்றிய மதிப்பீடொன்றை வெளியிட்டிருந்தமையினால் சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுக்கமைவாக, கடுமையான கடன் மறுசீரமைப்பு நடைமுறை பின்னர் இலங்கையால் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையினாலும்;

இருதரப்பு கடன்வழங்குநர் மீள்கொடுப்பனவுகளையும், இறையாண்மை பிணை உரிமையாளர்களுக்கான கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியுள்ள வெளிநாட்டுக் படுகடன் திருப்பிச் செலுத்தல்கள் இடைநிறுத்தப்பட்ட போதிலும், பலதரப்பு படுகடன் கொடுப்பனவு களைத் திருப்பிச் செலுத்துவதில் இலங்கை தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தமையினாலும்;

2023 யூன் 28 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தினைத் தொடர்ந்து, பொதுப்படுகடனைச் செலுத்துவதில் உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதற்கு இலங்கையின் உள்நாட்டு படுகடன் உகந்தநிலைக்கு ஆக்கப்படுதல் வேண்டும் என்று பாராளுமன்றம் தீர்மானித்திருந்தமையினாலும்;

உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையானது, சர்வதேச நாணய நிதியத்தின், நிலையான படுகடனைச் செலுத்துகின்ற மதிப்பீட்டிற்கு அமைவாக இலங்கையால் நடத்தப்பட்டு வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டமையினால், இதன் விளைவாக, வெளிநாட்டுக் கடன்களின் எஞ்சிய இரண்டு பிரிவுகள் இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் இறையாண்மை பிணை உரிமையாளர் களுக்கான கொடுப்பனவுகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தமையினாலும்;

சர்வதேச நாணய நிதியத்தின் நிலையான படுகடன் அளபுருக்களுக்கேற்ப இருதரப்பு கடன்களை மறுசீரமைப்பதற்காக, பிரான்ஸ், யப்பான் மற்றும் இந்தியா ஆகியவற்றின் தலைமையின் கீழ் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவொன்று (OCC) அமைக்கப்பட்டிருந்தமையினாலும், அதேவேளை, இலங்கையானது சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கியுடன் (EXIM Bank) உத்தியோகபூர்வக் கடன் வழங்குநர் குழுவாக அதே அளபுருக்களுக்குள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தமையினாலும்;

எதிர்காலத்தில் சாத்தியமான நேர்மறையான கடன் மீளாய்வுகளுக்கு வழிவகுத்து, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழு (OCC) மற்றும் சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவற்றுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் வெற்றிகரமான முடிவை கோடிட்டுக் காட்டும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை 2024 யூன் 26 ஆம் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தமையினாலும்;

சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான அணுகுகையை இலகுபடுத்தவுள்ள இந்த மூலோபாய மற்றும் அளபுரு அணுகுமுறையின் விளைவாக செம்மைப்படுத்தப்பட்ட கொடுகடன் தரப்படுத்தல்களை அடைவதற்கு இலங்கை எதிர்பார்க்கின்றமையினாலும்;

அரசாங்கத்தின் தொடர்ச்சியான வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறித்துகாட்டி, இலங்கை அரசாங்கமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவும் (OCC), 2024 யூன் 26 ஆம் திகதி பரிஸில் படுகடன் மறுசீரமைப்பு இறுதி உடன்படிக்கையொன்றினை எய்தியிருந்ததுடன், இலங்கை அரசாங்கம் மற்றும் சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவை பெய்ஜிங்கில் கடன் மறுசீரமைப்பு இறுதி உடன்படிக்கையொன்றினை எய்தியிருந்தன. இந்த உடன்படிக்கைகள், இலங்கையானது, கடன் வழங்கும் நாடுகளுடன் புதிய ஈடுபாட்டுடன் அதன் இருதரப்பு பொருளாதார உறவுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வழிவகுக்கின்றமையினாலும்;

சர்வதேச நாணய நிதியத்தின் நிலையாக படுடைனைச் செலுத்துதல் பற்றிய பகுப்பாய்வுடன் ஒத்துப்போகும் வகையில் படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள், படுகடனை நிலையாகச் செலுத்துவதனை மீள அடைவதற்கு கருவியாக அமைந்துள்ளன. மேலும், அவை விரைவான பொருளாதார மீட்சிக்கு உதவி, நிலையான வளர்ச்சியைப் பேணி இலங்கையின் பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்களவு மாற்றியமைப்பதற்கும் தயாராகவுள்ளமையினாலும்;

2024 யூன் 26 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பின்வரும் உடன்படிக்கைகளை அமுல்படுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்குவதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் படுகடன் மறுசீரமைப்புத் தொடர்பில், இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவிற்கும் (OCC) இடையில் 2024 யூன் 26 ஆம் திகதி எய்தப்பட்ட இறுதி உடன்படிக்கை; மற்றும்

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கும் (EXIM Bank) இடையில் 2024 யூன் 26 ஆம் திகதி எய்தப்பட்ட கடன் உடன்படிக்கைகளுக்கான இறுதித் திருத்த உடன்படிக்கை.

*19

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 25 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 32 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஜனவரி 12 ஆம் திகதிய 2366/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2024)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*22

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் அக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிய 2381/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரை களுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 28 ஆம் திகதிய 2364/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

24.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

25.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

ஹெக்டர் அப்புஹாமி ஹெல்பிங் ஹேண்ட் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

ஜனரஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

வன்னி மண் அறக்கட்டளை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.